# உள்ளே வெளியே

வாசிக்க: மத்தேயு 23:23-33

***"வெளிப்புறம் சுத்தமாகும்படி உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு" (மத் 23:26)***

மாய்மாலம் என்றால் முரண்பாடு என்று பொருள். அது சிந்தனைக்கும் சொல்லுக்கும் உள்ள முரண்பாடு (உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல்) மற்றும் சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு (மத் 23:2,3). வீட்டிலும், வெளியிலும் முரண்பாடு. வெளியில் தங்களை நல்லவர்களாகக் காண்பித்துக்கொள்வார்கள்; ஆனால் வீட்டுக்குள் நடத்தை மோசமாக இருக்கும். ஞாயிற்றுக்கிழமையில் தேவ தூதரைப் போலவும் மற்ற நாட்களில் பிசாசைப் போலவும் இருப்பர் சிலர்.

மாய்மாலம் எதினால் உண்டாகிறது ? மாய்மாலமாக நடப்பது சரிதான் எனப் பலர் நினைக்கிறார்கள். அப்படி நடந்துகொண்டு பிறர்மேல் குற்றங்காண்கிறார்கள். இது சுயநீதி (மத் 7:4,5). வெளிவேடம் போட்டுக்கொண்டு பிறர் பாராட்டவேண்டுமெனப் பிரியப்படுவதும் இதற்கோர் காரணம் (மத் 23:27,28). உள்ளான வாழ்க்கையைவிட, புறம்பான காரியங்களுக்கு முக்கியத்துவம் தருவதும் மாய்மாலத்தின் இன்னொரு காரணி (மத் 23:25,26). பொருளாசையும் (எசேக் 33:31), அடிப்படைகளைவிட்டு சிறிய காரியங்களை வற்புறுத்துதலும் பிற காரணங்கள் (மத் 23:24). விபசாரக்காரரே... திருடரே... கொலைகாரரே... உங்களுக்கு ஐயோ என்று இயேசு சொல்லவில்லை. ஆனால் திரும்பத்திரும்ப பலமுறை, மாய்மாலக்காரரே உங்களுக்கு ஐயோ என்று சாடியுள்ளார். மாய்மாலம் அவ்வளவு கொடியது.

மாய்மாலம் பொதுவாக ஆன்மீகப் பகுதிகளில்தான் அதிகம் காணப்படுகிறது. வாயிலே கடவுளை மக்கள் துதித்துப் புகழ்ந்தாலும் அவர்கள் இருதயம் கடவுளோடு இருப்பதில்லை (மத் 15:7-9). கடவுளின் வார்த்தைகளைக் கேட்பதில் ஆர்வம் காட்டுவர்; ஆனால் அதின்படிச் செய்வதில்லை (எசேக் 33:31,32). இன்னும் சிலர் ஊருக்குத்தான் உபதேசம் (ரோ 2:21-23; சங் 50:16). ஆன்மீக முயற்சிகளான தர்மம் செய்தல், ஜெபிக்கும்போது கவர்ச்சிகர வார்த்தைகள் பயன்படுத்துதல், பிறர் தெரிய உபவாசம் இருத்தல் போன்றவைகளிலும் ஈடுபடுவார்கள் இவர்கள் (மத் 6:2,5,16). தன் அயலானிடம் நன்றாகப் பேசுவதுபோல நடிக்கும் இந்த வெளி வேடக்காரர், உள்ளத்திலோ அவர்களுக்குக் கண்ணி வைப்பார்கள்.

மாய்மாலக்காரரின் நம்பிக்கையும், மகிழ்ச்சியும் அதிக நாள் நிலைக்காமல் சீக்கிரம் அழியும் எனத் திருவசனம் போதிக்கிறது (யோபு 8:13-15). இவர்களுக்குக் கடவுள் "ஐயோ" எனக் கூறுவதிலிருந்தே இவர்களது எதிர்காலத்தை நாம் யூகித்துக் கொள்ளலாம். இவர்களது முடிவு நரகம்தான் (அப் 5:1-11). ஆன்மீக வளர்ச்சியை மாய்மாலம் வெகுவாய்த் தடுக்கும் (1 பேது 2:1-3).

மாய்மாலம் இவ்வளவு கொடியதானதால் கடவுளின் பிள்ளைகள் யாரும் இதற்கு இடமே தரக்கூடாது. நம் சிந்தனை, செயல், இருப்பிடம் அனைத்தையும் கடவுள் அறிந்திருக்கிறார் எனத் திருப்பாடகன் கூறுகிறான் (சங் 139). நாம் கடவுளின் நியாயத்தீர்ப்புக்குமுன் நிற்போம் என அவருக்குப் பயந்திருத்தல் ஒருபோதும் நம்மைவிட்டு அகலக்கூடாது (2 கொரி 5:10-12).

*எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு (திருக்குறள்)*